# மிகத்தொன்மை வாய்ந்த தமிழர்களின் வரலாறு


## மெசப்பத்தேமியாவிலிருந்து மதுரை வரை.

ஆய்வு : சிவகணேசன்

எழுத்துருவாக்கம் : நிவேதா உதயராயன்

- ஏறத்தாழ 10,000 ஆண்டுகளாக மெசப்பத்தேமியாவில் மக்கள் வாழ்ந்ததாக அமெரிக்க, ஐரோப்பிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
- கி.மு 6000 – 2500 வரை மெசப்பத்தேமியாவில் அதி உன்னத வளர்ச்சி கொண்ட குமுகாயம் ஒன்று இருந்தது.
- மெசப்பத்தேமியா என்றால் இரு நதிகளுக்கு இடையே உள்ள நிலம் என்று பொருள்.
- இந்நகரம் யூப்பிரட்டிஸ், தைக்கிறிஸ் ஆகிய இரு நதிகளுக்கிடையே அமைந்திருந்தது.
- அங்கே வாழ்ந்த மக்கள் சுமேரியர் என அழைக்கப்பட்டனர். இவர்களே உலகின் முதல் நகரத்தை உருவாக்கியவர்கள்.
- இவர்கள் கருமையான தோல் நிறத்தைக் கொண்டவர்களாகவும், உயரம் குறைந்தவர்களாகவும் உடற்பருமன் கொண்டவர்களாகவம் இருந்தனர்
- அப்போதிருந்த மற்றைய இனங்களிலிருந்து வேறுபட்டு நின்றார்கள்.

# முன்னர் மெசப்பத்தேமியா - இப்போது ஈறாக்




- சுமேரியர்கள் ஆடு, மாடு, கழுதை போன்ற சில விலங்குகளையே தமது தேவைக்குப் பயன்படுத்தினர். குதிரையோ, வேறு விலங்குகளோ அவர்களிடம் காணப்படவில்லை.
- அவர்கள் மாமிச உணவை அதிகம் உண்ணாது பயிர் செய்யப்பட்ட உணவுகளையே உண்டனர்.
- உழவுக்கு மாடுகளைப் பயன்படுத்தினர்.
- நிலையாக ஓரிடத்தில் வாழ்ததனாலும் அளவுக்கதிகமான உணவு கிடைத்ததாலும் சுமேரியர்களின் மக்கள் தொகை குறுகிய நிலப்பரப்பில் அதிவேகமாகப் பெருகியது.
- இதுவே பெருநகரங்கள் அங்கு உருவாக வழிவகுத்தது. சுமேரியர்களே உலகின் முதன் நகரை அமைத்தார்கள். அதன் பயனாக அதி உன்னத வளர்ச்சி கொண்ட குமுகாயமாக மாற்றப்பட்டது.
- சுமேரியர் பன்னிரெண்டு நகரங்களை அமைத்தனர். உர் என்னும் நகரமே தலைநகரமாக இருந்தது. இந்த **உர்** என்பதே பின்னர் ஊராக வந்தது.
- அக்காலத்தில் எகிப்தியர், சீனர், மாயன்ஸ், போன்ற மாந்த இனங்கள் இருந்தாலும் அவர்கள் சுமேரியர்கள் போல் வளற்சியடைந்திருக்கவில்லை.

- ஓர் இனம் நாகரீகம் அடைவதற்குப் பல ஆண்டுகள் எடுக்கும்.
- சுமேரியர் விவசாயத்தையே முதற்றொழிலாகச் செய்தனர்.
- விவசாயத்தைப் பெருக்குவதற்காக வெண்கலத்தாலான கலப்பையைப் பயன்படுத்தினர்.
- பார்லி, ஏமர், (ஒருவகைத் தானியம்) ஒலீவ், முந்திரிகை, சணல் போன்றவற்றைப் பயிரிட்டனர்.
- தமது தேவைக்கு அதிகமான உணவு பயிரிடப்பட்டதால் அதைப் பண்டமாற்றுச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆதனால் பொருட்களுக்குக் கணக்கு வைக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டது.

- பொருட்களைப் பரிமாற்றம் செய்வதற்குக் களிமண்வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. (கோளம், கூம்பு மற்றும் சதுர வடிவங்கள்). இவை வெவ்வேறு அளவுகளில் இருந்தன.
- எ+கா : நான்கு ஆடுகள் வாங்கினால் ஆட்டுக்கான பொருட்களைக் கொடுத்து அத்தோடு ஒரு களிமண் கோளத்தையும் கொடுக்கவேண்டும்.
- வணிகம் முடிந்தபின் எத்தனை ஆடுகள் வெளியே போயின என்று கோளங்களின் எண்ணிக்கையை வைத்துத் தெரிந்து கொள்ளலாம்.


செய்திகளைக் குறிப்பதற்கு இப்படியான சித்திரவடிவங்களைப் பதித்தனர்.







சித்திர வடிவம்




அடையாள முத்திரை




- காலஞ் செல்லச்செல்ல குறியீடுகளைப் பயன்படுத்தினர். இக் குறியீடுகள் கூனிபோம் (Cuneiform writing) என அழைக்கப்படும்.
- களிமண்ணால் ஆக்கப்பட்ட தட்டுக்களில் குறியீடுகள் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.
- இக்குறியீட்டு முறை பின்னர் மற்றைய இனங்களிடமும் பரவியது.
- சிறிது காலம்செல்ல வட்டம் அரைவட்டம் போன்ற குறியீடுகள் பாவனையில் இருந்தன.
- முற்றிலும் இருவேறுபட்ட எழுத்துவடிவங்கள் சுமேரியரிடம் பாவனையில் இருந்தன.

## கூனிபோம் வரிவடிவம்




பிற்காலத்தில் தாம் எழுதிய களிமண் தட்டுக்களை எட்டுப்பா என்று அழைத்தனர். ஏடுகளில் எழுதப்பட்ட பாடல்கள் ஏட்டுப்பாக்கள் என முன்னர் அழைக்கப்பட்டது.




# கணக்குகளைக் குறித்து வைப்பதற்குக் களிமண்ணாற் செய்த உருளைகள் பயன்படுத்தப்பட்டன.



MS 2426
Royal inscription of Gishakidu of Umma.
Sumer, ca. 2385 BC







- சுமேரியர்களின் எழுத்துமொழி இருவேறு நிலைகளைக் கொண்டிருந்தது. 1 – சித்திரவடிவம் 2 – அட்சரவடிவம்
- அம்மொழி சித்திரவடிவிலிருந்து வரிவடிவம் எடுப்பதற்கு கிட்டத்தட்ட 2500 வருடங்கள் எடுத்திருக்கின்றது.
- மொழியின் வரிவடிவ வளர்ச்சியை உலகின் அதி உன்னத

சாதனை என மேற்குலகங்கள் கூறுகின்றன.

- இவ்வளர்ச்சி ஏற்படக் கரணியம் சுமேரியர் நிறுவிய சங்கங்கள், அவர்களிடம் அமைத்த பாடசாலை என்பன.
- இந்த வரலாறு திட்டமிட்டே மேற்குலகால் மறைக்கப்பட்ட, தமிழர் இதுவரை அறியப்படாத வரலாறாகும்.
- இப்போதுகூட மேற்குலகம் தமிழரைச் சுமேரியருடன் தொடர்புபடுத்த விரும்பாது சுமேரிய மொழியைக் காணவில்லை என்கின்றது. சுமேரிய இனம் மெசப்பத்தேமியாவுடன் அழிந்துவிட்டதாகக் கூறுகின்றது.
- மேற்குலக ஆய்வாளர்கள் திராவிட மொழி சுமேரிய மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டதாகக் கூறுகின்றது.
- இந்த இன மக்கள் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்திருந்தார்களா? என எழுதுகின்றது.

- கற்களால் வீடுகட்டி வாழ்ந்த மனிதன் செங்கற்களைக் கண்டுபிடித்தான்.
- ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் களிமண்ணைச் சுட்டு எடுப்பது செங்கல்.
- செங்கற்களை அடுக்கிச் சுமேரியர் வீடுகளை அமைத்தனர்.
- புயல், வெள்ளம் போன்றவற்றால் சுமேரியர்களின் வீடுகள் சேதமானபோது உடனேயே மீண்டும் கட்டப்பட்டன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
- களிமண்ணாலோ வேறு எதனாலோ கட்டப்பட்டிருப்பின் உடனே மீண்டும் கட்டுவது சாத்தியமன்று.
- அத்தோடு கழிமண் நீரிற் கரைந்துபோகும் தன்மையுள்ளது.





Sumerian Kitchen





# உலோகத்தின் கண்டுபிடிப்பு

- இவர்கள் செங்கல்லைச் சூளைகளில் சுடும்போது மினுக்கமான திரவம் வெப்பத்தினாற் உருகி ஓடியது.
- பின் அத்திரவம் இறுகியதும் கடினமாகியது. அதிலிருந்து செப்பு அறிமுகமாகியது. சிறிது காலத்தில் இன்னொரு உலோகமான வெள்ளீயம் கண்டுபிடிக்கப்பட்டது. இளகும் தன்மைகொண்ட இவற்றினால் அணிகலன்கள், தட்டுகள், செம்புகள் போன்றன ஆக்கப்பட்டன. சிறிது காலம் செல்லத் தங்கத்தின் பயன்பாடும் பாவனைக்கு வந்தது.





# சுமேரியர் காலத்தில் வடிவமைத்த அணிகலன்கள்











ஆட்சியாளர்களின் கொண்டாட்டம் - அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஓவியங்கள். கி.மு 2400



# போர் ஆயத்தம்



# விளையாட்டு



# காதணி அணிந்துள்ள பெண், ஆண்








கலப்பை கொண்டு உழுதல். உழும்போது தானாகவே விதைக்கும் பொறிமுறை.




- சுமேரிய இனம் கணிதத்தில் பாரிய வளற்சியடைந்ததனால் அதைத் தம் இனத்தவர்க்குக் கற்பிப்பதற்குப் பாடசாலை அமைத்தனர்.
- குருவினால் கணிதம் போதிக்கப்பட்டது. குருவே மன்னனிலும் பார்க்க அதிக அதிகாரங்கள் கொண்டிருந்தார்.
- பாடசாலையில் பலவந்தமாகக் கணிதம் கற்பிக்கப்பட்டது.
- கணக்கு வளக்குகளைப் பாதுகாப்பதற்குக் கணிதம் கற்பிக்கப்பட்டது.
- ஒருவர் எட்டு வயது தொடக்கம் தனது இருபதாவது வயதுவரை கட்டாயம் கற்கவேண்டும். ஆண்கள் மட்டுமே கற்றனர்.
- ஆனால் அனைத்து மக்களும் கற்கவில்லை. கோயில்களினாற் தெரிவு செய்யப்பட்டவர்களே கற்றனர். குருவே மன்னனிலும் பார்க்க அதிக அதிகாரங்கள் கொண்டிருந்தார். குருமார், ஊர்த் தலைவர்கள், அறிஞர்கள் கூடிய இடம் சங்கம் (சங்கா) என்று அழைக்கப்பட்டது.
- கூனிபோம் எழுத்துக்கள் முக்கோண வடிவம் கொண்டவை.அவை ஆயிரக்கணக்கான சொற்களைக் கொண்டிருந்தன.
- பாடசாலைகள் சங்கங்கள் என்பன கோயில்களின் தலைமையிலேயே இயங்கின.
- தானியங்கள் கொடுக்கல் வாங்கல்கள் கோயில்களிலேயே இடம்பெற்றன.

கோயில்கள்
சீகுராற்(சிகரம்) என
அழைக்கப்பட்டன.
இவை மிகப்பெரிதாகக்
கட்டப்பட்டிருந்தன.
இக் கோயில்கள்
குருமாரினாலேயே
நிர்வகிக்கப்பட்டன.



www.dk.com




# உர் என்று அழைக்கப்பட்ட ஊரிலிருந்த சீகுராற் கி.மு 2097 – 2080.



Fig. 104. Ziggurat, Ur. Reign of Ur-Namma, ca. 2097–2080 B.C.


# இடிபாடுற்ற நிலையிலுள்ள சீகுராற் கி.மு 2100



- இந்தியாவில் ஒன்றன்மேல் ஒன்றாக ஒன்பது நிலைகளையுடைய மாடக்கோயில்கள் பல இருந்ததாகச் சிற்ப நூல்கள் கூறுகின்றன. கி.பி 5ம் நூற்றாண்டின் இறுதியில் கருங்கற்களால் கோயில்களை ஆக்கும் கட்டடக்கலை வந்துவிட்டதனாலும் செங்கற்களைவிட கருங்கற்கள் நீண்ட காலம் அழியாது இருக்கும் தன்மையுடையது என்பதாலும் செங்கற் கோயில்களின் முறை வழக்கிழந்து போயிற்று.

- ஓரினம் தாம் வாழ்ந்த நிலத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து செல்லும்போது தாம் பயன்படுத்திய அனைத்துப் பொருட்களையும் கொண்டு செல்வதில்லை.
- மாறாக அதன் கலை நுணுக்கங்களைப் போனபோன இடங்களிற் கையாள்கின்றனர்.
- வேற்று நாட்டவரின் பொருட்களின் பாவனை அவர்களிடையே பரவினாலும் தமது பொருட்களையே முதன்மைப்படுத்துவர்.
- சுமேரியர் குயவனின் அச்சைக் கண்டுபிடித்தனர்.
- களிமண்ணால் மட்பாண்டங்கள் செய்தனர்.
- அவர்கள் புலம்பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் அவற்றை விட்டுச்சென்றுள்ளனர்.
- சிவப்பு, கறுப்பு நிற மட்பாண்டங்கள் ஈறாக் தொடங்கி ஈழம் வரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# கிட்டத்தட்ட கி.மு 6000 வருடப் பழைமையான பானை



# கி.பி 2900-2400 சுமேரியர்களின் கூசா, மண் பானை.





- ஓரினத்தினர் பெருங்குழுவினராக ஓரிடம்விட்டு மற்றோரிடம் புலம்பெயர்ந்து செல்லும்பொழுது தமது மொழியையும் தம் மரபுவழிக் கலாச்சாரப் பண்புகளையும் வழக்கிழந்துவிடாது பேணுவர். இவ்வகையான புலம்பெயர்தலைக் கொண்டவர்களே தழிழர்.
- சாமுவல் நோஆ, அன்ரன் கில், ஒலிவ பிறே, யோன் அருஸ், றோனால்ட் வலன்பெல்ஸ் போன்றோர் சுமேரிய இனத்தின் ஆய்வுகளைச் செய்து நூல்களை வெளியிட்டிருந்தாலும் தமிழர்கள்தான் சுமேரியர்கள் என்பதைக் கூறவில்லை. ஏனெனில் அவர்கள் ஆரிய வழித்தோன்றல்கள் என்பதும் ஒரு கறுப்பினம் எழுத்து, மொழி உருவாக்கத்திலும் பல பாரிய கண்டுபிடிப்புக்களுக்கும் உரியவர்கள் என்பதை நிறுவக்கூடிய நிலையோ ,ஆய்வாளர்களோ அன்றி தழிழர்களுக்கு ஒரு நாடோ இல்லை என்பதுதான்.

- ஓரினம் தாம் வாழ்ந்த நிலத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து செல்லும்போது தாம் பயன்படுத்திய அனைத்துப் பொருட்களையும் கொண்டு செல்வதில்லை.
- மாறாக அதன் கலை நுணுக்கங்களைப் போனபோன இடங்களிற் கையாள்கின்றனர்.
- வேற்று நாட்டவரின் பொருட்களின் பாவனை அவர்களிடையே பரவினாலும் தமது பொருட்களையே முதன்மைப்படுத்துவர்.
- சுமேரியர் குயவனின் அச்சைக் கண்டுபிடித்தனர்.
- களிமண்ணால் மட்பாண்டங்கள் செய்தனர்.
- அவர்கள் புலம்பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் அவற்றை விட்டுச்சென்றுள்ளனர்.
- சிவப்பு, கறுப்பு நிற மட்பாண்டங்கள் ஈறாக் தொடங்கி ஈழம் வரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- ஈறாக் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள், ஈமத்தாழிகள், கல்மேசைகள் போன்றன கி.மு 5000-3000 ஆண்டுக்கு இடைப்பட்ட காலம்.
- சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டவை கி.மு 2700-2400 ஆண்டுக்கு இடைப்பட்டது.
- மத்திய இந்தியாவிலும், மேற்கிந்தியாவிலும் கி.மு 1800ம் ஆண்டுக் காலப்பகுதிக்குரியது.
- தமிழகத்தின் தென்கோடியிலும் ஈழத்திலும் கி.மு 1000ம் ஆண்டுக்குரியவை.
- இக்காலங்களிலெல்லாம் ஒரேயின மக்கள்கூட்டம் இங்கு வாழ்ந்ததை அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

## சுமேரியர்களின் கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| எண்கள், மாதங்கள் | கணிதப் பாடசாலை. |
| சக்கரம் | திருக்கை வண்டில். |
| செப்புக் கலப்பை | நவீன விவசாயம். |
| வரி வடிவம் | கணக்கு வைத்திருத்தல். |
| குயவனின் அச்சு | மட்பாண்டம். |
| கப்பல் | பல வகை |
| வரைபடம். | நிலஅளவை |
| செங்கற்கள் | கோயில்கள், வீடுகள். |
| இசைக்கருவி | யாழ் |

10000 ஆண்டுகள் ஆனபின் இன்றும் உலகில் 60 வீதமான வீடுகள் செங்கல்லாலேயே கட்டப்படுகிறது.

# சுமேரியர்களின் கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| எண்கள், எழுத்துக்கள் | கணிதப் பாடசாலை. |
| சக்கரம் | திருக்கை வண்டில். |
| வெண்கலம் | கருவிகள், பாத்திரங்கள் |
| கலப்பை | நவீன விவசாயம். |
| வரி வடிவம் | கணக்கு வைத்திருத்தல். |
| குயவனின் அச்சு | மட்பாண்டம். |
| கப்பல் | பல வகை |
| வரைபடம். | நிலஅளவை |
| செங்கற்கள் | கோயில்கள், வீடுகள். |
| இசைக்கருவி | யாழ் |

10000 ஆண்டுகள் ஆனபின் இன்றும் உலகில் 60 வீதமான வீடுகள் செங்கல்லாலேயே கட்டப்படுகிறது.

# கால அளவை


- முதலில் விவசாயம் செய்தபோது ஆற்றுநீரை நம்பித் தொடக்கப்பட்டது. பின் காலநிலை மாற்றத்தால் பயிர்கள் அழிவுற்றபோது அந்த அழிவிலிருந்து பயிர்களைக் காப்பதற்காக வானிலை அவதானிக்கப்பட்டது.
- அதன் பயனாக வாரம், மாதம், வருடம், பருவகாலங்கள், வானியல் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.
- உயிர்மெய்த் தத்துவம் (Dualism).
- சமயநெறியின் வளர்ச்சி – ஒருகடவுள் நிலைப்பாடு (தூய அறிவு)
- ஒரு இனம் வெகு உன்னத வளர்ச்சி பெற்றாற்றான் ஒரு கடவுள் நிலைப்பாடு தோன்றியிருக்கும்.
- இந்த ஒருகடவுள் நிலைப்பாட்டைப் பபிலோனியர் எம்மிடமிருந்து உள்வாங்கினர். இம்மதக்கோட்பாடே ஆபிரகாம் மதமாக வளர்ச்சியுற்றது. ஆபிரகாம் மதப்பிரிவுள் யூதமதம், கிறித்தவ மதம், இஸ்லாம்மதம் என்பன அடங்கும்.
- இத்தனையும் சங்கம் வளர்ந்ததனால் ஏற்பட்டது.

விவசாயத்திற்கு திருக்கை வண்டில்கள் பயன்படுத்தப்பட்டன






- சுமேரியர்களே யாழ்போன்ற இசைக்கருவியை வடிவமைத்தவர். அவற்றைக் கோயில்களில் வாசித்தனர்.







# கோயில்களில் இருக்கைகளில் இருந்தபடி யாழ் மீட்டப்படுகிறது.




# மாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.









# சுமேரியச் சிலைகள்





# சுமேரியராற் செய்யப்பட்ட உலோக ஆயுதங்கள்





- சுமேரியர் பொருட்களை அரைப்பதற்குப் பாவித்த பொறிமுறை இது. அம்மிக் கற்கள்





*Figure 12:5* The grinding room in the early second-millennium palace at Ebla. (Photo: courtesy P. Matthiae)


# இரு மன்னர்களின் சந்திப்பு



# குருவழிக் கல்விமுறை



# மன்னனுக்குச் சாமரம் வீசப்படும் காட்சி



# நூல் நூற்றல்



மிக நீண்ட காலம் ஒன்றாக இணைபிரியாது வாழ்ந்த இணையர்.







# சேலை அணிந்த, கொண்டை போட்டுள்ள பெண்.





# சுமேரியர்களின் யோகக்கலை





# சுமேரியர்களின் அழிவு

- இருபுறமும் மிக நீளமான நதிகள் இருந்ததனால் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டன.
- நிலம் சிறிதுசிறிதாக உப்புவிளையும் நிலமாக மாறியமை.
- கோதுமையின் 40 வீத வீழ்ச்சி.
- நாடோடிகளின் தாக்குதல்.
- இக்கரணியங்களால் சுமேரிய இனம் தாம் வாழ்ந்த நிலத்தை விட்டு சிந்துநதிக் கரையோரமாகப் புலம்பெயர்ந்தனர்.
- பல நூற்றாண்டுகள் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த தமிழினத்தை மீண்டும் ஆரியர்களின் தாக்குதல் இந்தியாவின் தென்பகுதி வரை துரத்தியது.
- ஆகழ்வாய்வுகள் நிறுவும் கடற்கோள் ஏற்பட்ட காலத்தை தொல்காப்பியமும் குறிப்பிடுகிறது.

- Samuel Noah Kramer – The Sumarians
  The History , Culture and Character - இஸ்ரேலியர்
- Nicholas Postgate-Early Mesopotamia.
- Anton Gill –The Rise and Fall of Babylon
- Oliver Frey –Ancient Mesopotamia
- Joan Arus – Roland Wallenfels – Art of the First Cities

இந்நூல்கள் மெசப்பத்தேமியாவில் வாழ்ந்த சுமேரிய இன மக்களின் வரலாற்றை ஆய்வுசெய்து எழுதப்பட்டவை.